CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්වය නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

No 17A, Pedris Road, Colombo 3, Tel: **011 3010662-4**, Fax: **011 2577117**
**E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org

# நாடாளுமன்ற பொதுத் தேர்தல் 2015

## தேர்தல் தின ஊடக அறிக்கை 01

2015 நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு காலை 7 மணிக்கு ஆரம்பமாகியது. தே.வ.க.நி இற்கு கிடைக்கப்பெற்ற அறிக்கைகளின் படி, ஆகஸ்ட் 17, 2015 அன்று, காலை 11 மணி வரை நாட்டின் அநேகமான பகுதிகளில் வாக்களிப்பு சுமுகமாகவும் மற்றும் குழப்பங்கள் இன்றியும் நடைபெற்றிருந்தது. எவ்வாறாயினும், தேர்தல் சட்டங்களின் மீறல் சம்பவங்கள் நடைபெற்ற சில அறிக்கைகளை தே.வ.க.நி பெற்றதுடன் அவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

காலை 11 மணி வரை, தே.வ.க.நி 126 சம்பவங்களைப் பதிவு செய்தது, அதில் 30 சம்பவங்கள் பாரதூரமான சம்பவங்களாக வகைப்படுத்தப்பட்ட வேளையில் 96 சம்பவங்கள் சிறிய சம்பவங்களாக வகைப்படுத்தப்பட்டன. 9 சம்பவங்கள் வாக்களிப்பு நிலையங்களை அண்மித்த பகுதிகளில் கட்சி ஆதரவாளர்களின் பிரசன்னம் தொடர் பானவையாகும்.

அத்தகைய ஒரு அறிக்கையின்படி, ஐ.தே.க. ஆதரவாளர்கள் தம்புத்தேகம, தம்மென்னகம சமூக நிலைய வாக்களிப்பு நிலைய இல.62 இல் காலை 8 மணிக்கு ரஜின சந்தி, தம்புத்தேகமவில் அநுராதபுர மாவட்ட ஐ.தே.க வேட்பாளர்களான திரு.பி. ஹரிசன் மற்றும் திருமதி. சந்திராணி பண்டார ஆகியோர்களுக்கு சாதகமாக வாக்குகளை அளிப்பதற்கு கோரினர்.

வாக்காளர்களின் விரல்களை அடையாளப்படுத்துவதற்கு பயன்படுத்திய மை தொடர்பாகவும் தே.வ.க.நி பல முறைப்பாடுகளைப் பெற்றுக் கொண்டது. வாக்காளர்கள் தங்களது வாக்குகளை அளிப்பதற்கு முன்பாகவே மை அதன் நிறத்தை இழந்து விடுவதாக முறைப்பாடுகள் இருந்தன. அத்தகைய ஏழு (7) சம்பவங்கள் குருநாகல் (வாக்களிப்பு நிலையங்கள் 25, 26, 27 மற்றும் 28), முல்லைத்தீவு (வாக்களிப்பு நிலையம் 13), வவுனியா (வாக்களிப்பு நிலையம் 36) மற்றும் வன்னி (வாக்களிப்பு நிலையம் 85) என்பவற்றிலிருந்து தே.வ.க.நி இல் பதிவு செய்யப்பட்டது. தே.வ.க.நி இந்த முறைப்பாடுகள் பற்றி தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்தது.

வன்னி மாவட்ட ஐ.ம.சு.கூ வேட்பாளர் திரு. உதயராசா தனக்கு வாக்களிக்கும் படி வாக்காளர்களுக்கு அழுத்தம் கொடுத்ததாக தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது. இச் சம்பவம் வன்னி மாவட்டத்தின், வவுனியா தேர்தல் தொகுதியில் சிதம்பரபுரம் நாகராசா வித்தியாலயம், வாக்களிப்பு நிலையம் 73 இல் நடைபெற்றது.

காலை 7.30 அளவில் எகலியகொட, இரத்தினபுரி, பத்பெரிய நாரதா மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையம் 67 இற்கு முன்பாக ம.வி.மு இன் சின்னம் தரித்த ஒரு வாகனத்தில் பயணித்த ம.வி.மு வேட்பாளர் திரு. துனுவிலகே பந்துலசேனவினால், தே.வ.க.நி கண்காணிப்பாளர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டார்.

வாக்களிப்புச் சாவடியில் வாக்காளர்கள் இரகசியமான முறையில் வாக்களிப்பதற்கான வசதியின்மை குறித்து ஒரு முறைப்பாடு தே.வ.க.நி கிடைக்கப்பெற்றது. அத்தகைய ஒரு முறைப்பாடு, பதுளைத் தேர்தல் தொகுதியில் சமூக அபிவிருத்தி நிலைய மண்டப வாக்களிப்பு நிலையம் 31 பற்றியதானதாகும்.

வட்டரமதென்ன நகர சமூக மண்டப வாக்களிப்பு நிலையம் 16 இல், சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய அதிகாரி, கே.எம்.ஜி.சமரநாயக்கவின் பிரசன்னம் காரணமாக வாக்குகளை அளிப்பதற்கான இரகசியமான தன்மை

இருக்கவில்லை என ஒரு முறைப்பாடு தே.வ.க.நி கிடைக்கப்பெற்றது. இச்சம்பவம் காலை 8.40 அளவில், கண்டியில் இடம் பெற்றது.

அம்பலாங்கொட, கல்பொத்தவல திலக்சராம தேவாலய போதனா மண்டப வாக்களிப்பு நிலையம் 32 இல், அவரது கண்காணிப்புக் கடமையிலிருந்து விலகியிருப்பதற்கு, தே.வ.க.நி இன் தேர்தல் தினக் கண்காணிப்பாளர் சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய அதிகாரியினால் கேட்கப்பட்டதாக தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது. கண்காணிப்பாளர் அவரது கடமைகளிலிருந்து சுமார் 25 நிமிடங்கள் வரை விலகியிருக்க நேரிட்டது.

மேலும், தேவையற்ற உரை, செய்திகள் மற்றும் வாக்களிப்பு நிலையங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் பரப்புரைச் சாதனங்களின் விநியோகம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற அறிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

ம/புதுக்குடியிருப்பு அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையம் 9 ஐ அண்மித்ததாக ஐ.தே.க வேட்பாளர் ரிசாத் பதியுதீனின் ஆதரவாளர்கள் பரப்புரைச் சாதனங்களை கோணார்பண்ணையிலிருந்து புதுக்குடியிருப்பு வரையிலான பகுதியில் பரவலாக வீசிவிட்டுச் சென்றிருந்தனர்.

யாழ்ப்பாண இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளரான திரு. சிறிதரனின் ஒரு தொகையான கலண்டர்கள் மற்றும் ஸ்டிக்கர்கள் என்பன யாழ்ப்பாண நகரின் புனித தமிழ் கன்னியர் மடப் பாடசாலை வாக்களிப்பு நிலையம் 10 இனுள் போடப்பட்டிருந்தது.

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளரான திரு.ஆர்.ஜி. சமரநாயக்கவின் பிரசுரங்கள் மற்றும் ஏனைய பரப்புரைச் சாதனங்கள் என்பன தெல்தெனிய தேசியப் பாடசாலை வாக்களிப்பு நிலையம் 35 ஐச் சுற்றி பரவலாக வீசப்பட்டிருந்தது.

ஐ.தே.க வேட்பாளர் திரு.அசோக்க பிரியந்த (இல:4) மற்றும் ஐ.ம.சு.கூ வேட்பாளர் திரு. தயாசிறித்த திசேரா (இல: 3) ஆகியோரைக் குறிக்கும் பரப்புரைச் சாதனங்கள் (பிரசுரங்கள்) நாத்தாண்டியா, புத்தளம், தல்விலகல ஆரம்பப் பாடசாலை, தல்விலகல வாக்களிப்பு நிலையம் 55 ஐச் சுற்றியுள்ள பகுதிகளில் பரவலாக வீசப்பட்டிருந்தன.

அக்மீமன தேர்தல் தொகுதி ஐ.ம.சு.கூ வேட்பாளர் திரு.சந்திம வீரக்கொடியின் பிரசுரங்கள் அக்மீமன, காலி, மீகொட சர்வமித்ர ஆரம்பப் பாடசாலை வாக்களிப்பு நிலையம் 66 ஐச் சுற்றி 50 மீ தூரம் வரை பரவலாக வீசப்பட்டிருந்தது.

வெற்றிலைச் சின்னம் பொறிக்கப்பட்டு இலக்கங்கள் 8 மற்றும் 9 குறிப்பிடப்பட்டு முறையே ஐ.ம.சு.கூ இன் வேட்பாளர்கள் திரு. துமிந்து தயாசென் ரத்தியல மற்றும் திரு.துமிந்த திசாநாயக்கவின் பிரசுரங்கள் சென் ஜோசப் கல்லூரி மண்டப இல 1 (49) மற்றும் மண்டப இல 2 (47) இல் போடப்பட்டிருந்தன.

**தே.வ.க.நி கண்காணித்தல்**

தே.வ.க.நி அண்ணளவாக 4,000 கண்காணிப்பாளர்களை தேர்தல் தினத்தன்று வன்முறைச் சம்பவங்கள் மற்றும் முறைகேடுகளைக் கண்காணிப்பதற்காக களம் மற்றும் வாக்களிப்பு நிலையங்களில் கடமையில் ஈடுபடுத்தியிருந்தது. மேலும், நாடு முழுவதிலுமாக தெரிவு செய்யப்பட்ட இடங்களில் 75 நடமாடும் அணிகளையும் அது ஈடுபடுத்தியது. இதற்கு மேலதிகமாக, 90 கண்காணிப்பாளர்கள் 18 தேர்தல் தொகுதிகளில் இடப்பட்டு, வாக்கெண்ணப்படும் மையங்களில் கண்காணிப்பு பணிகளுக்கு இடப்பட்டுள்ள நிலையில், 21 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களைக் கொண்ட ஒரு அணியும் தேர்தல் தினத்தன்று தே.வ.க.நி இன் கண்காணிப்பு முயற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி), தேர்தல் வன்முறைகள் தொடர்பான சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் அரசியல் வன்முறைகளுக்கெதிரான ஒரு கூட்டமைப்பு என்பவற்றால் ஒரு சுயாதீன மற்றும் கட்சிச் சார்பற்ற ஸ்தாபனமாக 1997 இல் உருவாக்கப்பட்டது. தற்போது, தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இன்போர்ம் மனித உரிமைகள் ஆவண நிலையம் என்பவற்றால் உருவகிக்கப்படுகிறது.

**தே.வ.க.நி இன் அனைத்து அறிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் என்பன ஒன்லைனில் www.cmev.org எனும் முகவரியில் அணுக முடியும்**



கலாநிதி.பா.சரவணமுத்து
இணை அமைப்பாளர்



திரு.உதயா களுப்பத்திரன
இணை அமைப்பாளர்



திருவாட்டி. சீத்தா ரஞ்சனி
இணை அமைப்பாளர்